**தலைப்பு 319 – சப்ரகமுவ மாகாண சபை தொடர்பா - 2021**

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

நிகரற்ற சப்ரகமுவவிற்கு

### 1.2 பணிக்கூற்று

சப்ரகமுவ மக்களின் அபிவிருத்திக்காக சகல வளங்களையும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் சப்ரகமுவவின் வெற்றிப் பயணத்திற்கு.

### 1.3 செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2. வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

### மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

சப்ரகமுவ மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 35,918.2 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 33,040.7 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 8.01 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,877.5 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 30,153.0 | 30,127.2 | 25.8 | 0.08 |
| மூலதனம் | 5,765.2 | 2,913.5 | 2,851.7 | 49.46 |
| மொத்தம் | 35,918.2 | 33,040.7 | 2,877.5 | 8.01 |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.